Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, APRIL 30 2025

புதன்கிழமை 30, ஏப்ரல் 2025 | ஒளி: 10 கதிர் 208 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## மின் கட்டணம் உயரும் சாத்தியம்

சர்வதேச நாணய நிதியம் (IMF) அடுத்த தவணையாக 344 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளதால், செலவு மீட்பு விலையை மீட்டெடுப்பதைப் பொறுத்து, அரசாங்கம் மின்சார கட்டணங்களை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது என்று டெய்லி மிரர் செய்தி வெளியிட்டுள்ளது.

தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக, தற்போதைய அரசாங்கம் இந்த ஆண்டு ஜனவரியில் மின்சார கட்டணங்களை 20 சதவீதம் குறைத்தது. இருப்பினும், இது செலவு-மீட்பு விலை நிர்ணயம் அல்ல என்பதால்,

தொடர்ச்சி P2

## “சட்டத்தின் ஆட்சி இனி நடைமுறையில் இல்லை”

நாட்டில் சட்டம் காட்டுத்தனமாகி விட்டது, சட்டவிரோதம் அமலுக்கு வந்துள்ளது.

நமது சமூகத்தில் உள்ள அனைத்தும் கொலைகாரர்கள், பணம் பறிப்பவர்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன. கொலைகார கும்பல்கள் சமூகத்தின் கட்டுப்பாட்டை செயல்படுத்துபவர்களாக மாறிவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூறினார்.

கண்டி - பிலிமதலாவையில் நடந்த ஒரு பேரணியில் உரையாற்றிய அவர், சமீபத்திய கொலை அலையை விமர்சித்தார், மேலும் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் இப்போது தெருக்களிலும் மக்களின் வீடுகளுக்குள்ளும் நடப்பதை சுட்டிக்காட்டினார். மேலும், அரசாங்கத்திடம் எந்த தீர்வும் இல்லை என்றும் அவர் கூறினார்.

இந்த வன்முறை கலாசாரத்தைப் பற்றிப் பேசுகையில், இந்தக் கொலைகள் தேசிய பாதுகாப்பைப் பாதிக்காது என்று கூறி அரசாங்க அதிகாரிகள் அதன் தாக்கத்தைக் குறைத்து மதிப்பிடுவதாகவும் ஆனால் ஒரு நாட்டின் தேசிய பாதுகாப்பு என்பது அதன் மக்களின் பாதுகாப்பு என்றும் அவர் கூறினார்.



தொடர்ச்சி P2



### 25 ஆண்டுகளுக்குப் பிறகு

# படலந்த அறிக்கை

### சட்டமா அதிபருக்கு

அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட “படலந்த வீடமைப்புத் திட்டத்தில் சட்டவிரோதமான தடுப்பு முகாம்கள் மற்றும் சித்திரவதை முகாம்களை நிறுவுதல் மற்றும் நடத்திச் செல்லல் குறித்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை” ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் படி ஜனாதிபதி அலுவலகத்தினால் சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

25 ஆண்டுகளுக்குப் பிறகு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கை தொடர்பில் அடுத்த கட்ட முன்னெடுப்புகளை மேற்கொள்ள அரசாங்கம் முடிவு செய்துள்ளதுடன், அதன்படி, குறித்த அறிக்கை செவ்வாய்க்கிழமை (29) அன்று சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

## முடிவுக்கு வரும் குட்டி தேர்தல் பிரசாரம்

மே 6ஆம் திகதி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி தேர்தலுக்கான அனைத்து பிரசார நடவடிக்கைகளும் மே 03ஆம் திகதி நள்ளிரவில் முடிவடையும் என்று தேசிய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மே 03ஆம் முதல் தேர்தல் நாள் வரையிலான காலம் தேர்தலுக்கு முந்தைய அமைதியான காலமாக அறிவிக்கப்படும் என்று தேர்தல் ஆணையர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

வீடு வீடாகச் சென்று அதிகாரப்பூர்வ வாக்குச் சீட்டுகளை விநியோகிக்கும் பணி நேற்று செவ்வாய்க்கிழமை (29) முடிவடைந்துள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

தொடர்ச்சி P2




## “கொழும்பு நகரத்தை அழகான நகரமாக மாற்றுவோம்”






கொழும்பு அதன் சமய மற்றும் கலாசார பன்முகத்தன்மையால் அழகாக இருக்கிறது. நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து எமது நகரத்தை மிக அழகான நகரமாக மாற்றுவோம். அந்த நோக்கத்துடன், எந்தவித பாகுபாடும் இல்லாமல் அனைவரும் தேசிய மக்கள் சக்தியைச் சுற்றி ஒன்றுபட்டுள்ளதாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் உள்ள தெமட்டகொட, கொட்டாஞ்சேனை, மருதானை மற்றும் கொம்பனியவீதி ஆகிய இடங்களில் திங்கட்கிழமை (28) நடைபெற்ற மக்கள் சந்திப்புகளில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனை குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## பெலியத்த விபத்தில் 30 பேர் காயம்

ஹம்பாந்தோட்டை - பெலியத்த, ஹெட்டியாராச்சி வளைவுக்கு அருகில் செவ்வாய்க்கிழமை (29) அதிகாலை இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி, டிக்வெல்லவிலிருந்து பெலியத்த நோக்கிச் சென்ற தனியார் பேருந்து, எதிர் திசையில் பயணித்த இலங்கை போக்குவரத்து சபையின் (SLTB) பேருந்துடன் மோதியது.

விபத்தில் காயமடைந்த பேருந்துகளில் இருந்த பயணிகள் தங்காலை மற்றும் பெலியத்த வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பெலியத்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



### பாணந்துறையில் துப்பாக்கிச் சூடு:

## ஒருவர் பலி; ஒருவர் படுகாயம்

### பின்னணியில் இருப்பது குடு சலிந்து?

பாணந்துறை - ஹிரண பகுதியில் செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலக கும்பலின் தலைவரான

தொடர்ச்சி P2



இலங்கை மத்திய வங்கியின் 2024ஆம் ஆண்டுக்கான நிதியியல் அறிக்கைகள் மற்றும் செயல்பாட்டு அறிக்கையை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிடம் செவ்வாய்க்கிழமை (29) அன்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்து சமர்ப்பிக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### தென்னக்கோன் விவகாரம்:

## பொலிஸ் விசாரணைக் குழு நியமனம்

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தனது பதவித் தத்துவங்களை பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து அதன் வெளிப்படுத்தல்களை அறிக்கையிடுவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்க பொலிஸ் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது

பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ.

தொடர்ச்சி P2



## ஜனாதிபதி அனுர வியட்நாம் பயணம்

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வியட்நாமுக்கு எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இந்தப் பயணத்தின்போது, பல புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கையெழுத்திடப்படவுள்ளதாகவும் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

வியட்நாமில் ‘உலக அமைதி மற்றும் நிலையான வளர்ச்சிக்கான பௌத்த நுண்ணறிவு’ என்ற

தொடர்ச்சி P2

## “அது ஒரு இரகசியம் அல்ல”

### ரணிலுக்கு திசைக்காட்டி பதிலடி

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்க அழைப்பது இரகசியமல்ல என்று கூறிய அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுடனான தனது கடிதப் போக்குவரத்து தொடர்பாக ரணிலின் சமூக ஊடகப் பதிவை மேற்கோள் காட்டினார் செவ்வாய்க்கிழமை (29) தெரிவித்தார்.





தொடர்ச்சி P2

## “ஒரு திருட்டை கூட சுட்டிக்காட்ட முடியாத ஜனாதிபதி”

தற்போதைய ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து ஏழு மாதங்களுக்கும் மேலாகியும், கைது செய்யப்பட்ட திருடனால் ஒரு கூட தான் என்ன திருட்டுச் செய்தேன் என்பதை பொதுமக்களுக்கு சுட்டிக்காட்ட முடியவில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான சாகர காரியவசம் தெரிவித்தார்.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் திங்கட்கிழமை (28) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில்,

“ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தனது கட்சிக்கு வாக்களிக்குமாறு

தொடர்ச்சி P2

## கூட்டு நிர்வாகமே ஐ.ம.சவின் நோக்கம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் பிற கட்சிகளுடன் இணைந்து உள்ளூராட்சி மன்றங்களில் கூட்டு நிர்வாகங்களை அமைப்பது குறித்து ஐக்கிய மக்கள் சக்தி ஆராய்ந்து வருவதாக அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க செவ்வாய்க்கிழமை (29) அன்று தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மின் கட்டணம் உயரும் சாத்தியம்

இந்த நடவடிக்கை குறித்து IMF தனது அதிருப்தியை தெரிவித்தது. சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியால் ஆதரிக்கப்படும் இலங்கையின் சீர்திருத்தத் திட்டத்தின் நான்காவது மதிப்பாய்வை முடிக்க, பொருளாதாரக் கொள்கைகள் குறித்த ஊழியர்கள் மட்ட ஒப்பந்தத்தை சர்வதேச நாணய நிதியமும் இலங்கை அதிகாரிகளும் சமீபத்தில் எட்டினர். இந்த மறுஆய்வு சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டவுடன், இலங்கைக்கு சுமார் 344 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைக்கும், இதன் மூலம் இந்த ஏற்பாட்டின் கீழ் வழங்கப்படும் மொத்த சர்வதேச நாணய நிதிய நிதி உதவி சுமார் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும்.

ஆயினும்கூட, பணியாளர் நிலை ஒப்பந்தம் IMF நிர்வாகக் குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டது, இது பின்வருவனவற்றைப் பொறுத்தது.

(i) மின்சார செலவு-மீட்பு விலையை மீட்டெடுப்பது மற்றும் தானியங்கி மின்சார விலை சரிசெய்தல் பொறிமுறையின் சரியான செயல்பாட்டை உறுதி செய்வது தொடர்பான முன் நடவடிக்கைகளை செயல்படுத்துதல்

(ii) பலதரப்பு கூட்டாளர்களின் உறுதியான நிதி பங்களிப்புகள் மற்றும் போதுமான கடன் மறுசீரமைப்பு முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதில் கவனம் செலுத்தும் நிதி உத்தரவாத மதிப்பாய்வை நிறைவு செய்தல் என்று இலங்கைக்கான IMF மிஷன் தலைவர் இவான் பாபகேர்ஜியோ கூறினார்.

இலங்கையின் லட்சிய சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் தொடர்ந்து பாராட்டத்தக்க விளைவுகளை அளித்து வருகிறது. நெருக்கடிக்குப் பிந்தைய வளர்ச்சி 2024 இல் 5 சதவீதமாக மீண்டது குறிப்பிடத்தக்கது.

வருவாய் திரட்டல் சீர்திருத்தங்கள் 2022 இல் 8.2 சதவீதமாக இருந்த வருவாய்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தை 2024 இல் 13.5 சதவீதமாக மேம்படுத்தியுள்ளன.

மத்திய வங்கியின் கணிசமான அந்நியச் செலாவணி கொள்முதல்களைக் கருத்தில் கொண்டு, மொத்த அதிகாரப்பூர்வ இருப்பு 2025 மார்ச் மாத இறுதியில் 6.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியது. கணிசமான நிதி சீர்திருத்தங்கள் பொது நிதிகளை வலுப்படுத்தியுள்ளன. இலங்கையின் கடன் மறுசீரமைப்பு கிட்டத்தட்ட நிறைவடைந்துள்ளதாக அவர் கூறினார்.

இந்த ஆண்டு ஜூலை 1 முதல் அமலுக்கு வரும் அடுத்த திருத்தத்தின் கீழ் மின்சார விலை நிர்ணயம் குறித்த அரசாங்கத்தின் நடவடிக்கை குறித்து கேட்டதற்கு, இலங்கை மின்சார சபையின் (CEB) ஊடகத் தொடர்பாளர் ஒருவர், விரைவில் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட உள்ள கட்டணங்களைக் கணக்கிடும் பணியில் ஈடுபட்டுள்ளதாகக் கூறினார்.

நாங்கள் செலவைக் கணக்கிடுகிறோம். மின் உற்பத்திக்கு நாம் சார்ந்திருக்கும் ஆதாரங்களைப் பொறுத்து இது மாறுபடும். சில நேரங்களில், மழை பெய்தால் நீர் மின்சாரத்தையே அதிகம் நம்பியிருக்கிறோம். இல்லையெனில், அது பெரும்பாலும் அனல் மின்சாரத்தையே சார்ந்துள்ளது. மேலும், பகல் நேர மின்சாரத் தேவைகளுக்கு சூரிய மின் உற்பத்தியைச் சார்ந்துள்ளோம் என்றும் அவர் கூறினார்.



## ஜனாதிபதி அனுர வியட்நாம் பயணம்

தொணிப்பொருளில் 2025 சர்வதேச வெசாக் தினம் இம்முறை கொண்டாடப்படுகின்றது. சுமார் 80 நாடுகளின் பிரதிநிதிகள் சர்வதேச வெசாக் தினத்தில் பங்கேற்க உள்ளனர். அதில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும் பங்கேற்கவுள்ளார்.

மேலும், ஜனாதிபதி பதவியேற்று 3ஆவது வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் விசாரணை குழு நியமனம்



தேசபந்து தென்னக்கோன் தனது பதவித் தத்துவங்களை பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து அதன் வெளிப்படுத்தல்களை அறிக்கையிடுவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்க பொலிஸ் விசாரணைக் குழுவொன்றைப் பரிந்துரைக்குமாறு, விசாரணைக் குழு விடுத்த கோரிக்கைக்கு அமைய பதில் பொலிஸ்மா அதிபர் குறித்த விசாரணைக் குழுவை நியமித்துள்ளார்.

இந்த விசாரணைக் குழு பாராளுமன்றத்தில் மூன்றாவது தடவையாக திங்கட்கிழமை (28) கூடியபோது நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் விசாரணைக் குழுவின் ஒத்துழைப்புடன் எதிர்கால விசாரணைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன், 2025.04.30ஆம் திகதி மீண்டும் கூடுவதற்கு இந்த விசாரணைக் குழு தீர்மானித்தது.

# கூட்டு நிர்வாகமே ஐ.ம.சவின் நோக்கம்

மேலும், "ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உடன் ஐக்கிய மக்கள் சக்திக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பிறகு அதனுடன் மற்றும் பிற கட்சிகளுடன் கூட்டு நிர்வாகங்களை உருவாக்க நாங்கள் நம்புகிறோம்," என்று அத்தநாயக்க ஒரு ஊடக சந்திப்பில் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனியாகப் போட்டியிடும் இடங்களில் தனது சொந்தக் கட்சியை ஊக்குவிப்பது இயல்பானது என்றும் அவர் கூறினார்.

# நிதியியல் அறிக்கைகள் கையளிப்பு

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவிடம் அறிக்கையின் பிரதியொன்றையும் கையளித்தார்.

இந்த நிகழ்வில் மத்திய வங்கியின் உயர் அதிகாரிகள் குழுவும் கலந்து கொண்டனர்.

# "சட்டத்தின் ஆட்சி இனி நடைமுறையில் இல்லை"

ஜனாதிபதியும் அரசாங்கமும் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்த இயலாதவர்களாகி விட்டதாக அவர் மேலும் கூறினார்.

அத்துடன், சட்டத்தின் ஆட்சி இனி நடைமுறையில் இல்லை. இன்று, கொலை கலாசாரம் ஆட்சி செய்கிறது" என்று பிரேமதாச அறிவித்தார்.

கூட்டத்தின் போது, அடிமட்ட அளவில் குழுக்களை அமைப்பதன் மூலம் மாகாண சபை நிறுவனங்கள் மூலம் சட்டம் ஒழுங்கை எவ்வாறு மீட்டெடுக்க முடியும் என்பதையும் பிரேமதாச விளக்கினார்.

# "அது ஒரு இரகசியம் அல்ல"

"இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுடனான தனது கடிதப் போக்குவரத்து குறித்து ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க எவ்வாறு அறிந்தார்" என்ற ரணில் விக்ரமசிங்கவின் கேள்விக்கான கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,

"ஏப்ரல் 11ஆம் திகதி இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் முன் ஆஜராக முடியாது என்றும் ஏப்ரல் 17ஆம் திகதி அவருக்கு புதிய திகதி வழங்கப்பட்டதாகவும் ஏப்ரல் 11ஆம் திகதி தனது சமூக ஊடகப் பதிவில் விக்ரமசிங்க பதிவிட்ட அமைச்சரவை முடிவுகளை அறிவிக்குமாறு வாராந்திர சுருக்கமான செய்திக்குறிப்பில் தெரிவித்தார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, விக்ரமசிங்கவின் சமூக ஊடகப் பதிவை மட்டுமே மேற்கோள் காட்டியதாகவும், அது ஒரு ரகசிய விடயம் அல்ல என்றும் அமைச்சர் கூறினார்.

ரணில் விக்ரமசிங்கவை இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவிற்கு அழைப்பது ஏப்ரல் 11ஆம் திகதிக்குள் தெரிந்த உண்மை. ரணிலின் சமூக ஊடகப் பதிவுகள் மூலம் ஜனாதிபதி அதைப் பற்றி அறிந்து கொண்டார். இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதை ஜனாதிபதிக்கு அறிவிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

# முடிவுக்கு வரும் குட்டி தேர்தல் பிரசாரம்

ஏப்ரல் 30ஆம் திகதிக்குப் பின்னர், தங்கள் வாக்குச் சீட்டுகளைப் பெறாதவர்கள், தேர்தல் நாள் வரை தங்கள் அடையாளத்தைச் சரிபார்த்து, தங்கள் பகுதியின் துணை அஞ்சல் அலுவலகத்தில் அவற்றைப் பெறலாம். தபால் துறையும் இதேபோன்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இந்த ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது, பொருத்தமான சின்னத்தை குறிக்க சுண்டு விரலைப் பயன்படுத்த தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

இதற்கிடையில், விநியோகத்திற்காக தபால் துறைக்கு வழங்கப்பட்ட அதிகாரப்பூர்வ தேர்தல் அறிவிப்புகளின் விநியோகம் கிட்டத்தட்ட நிறைவடைந்துள்ளது.

# "ஒரு திருடனை கூட சுட்டிக்காட்ட முடியாத ஜனாதிபதி"

மக்களிடம் கேட்பதை நாங்கள் கண்டோம். அனுரகுமார திசாநாயக்கவும் அவரது குழுவினரும் என்ன சொல்கிறார்கள் என்பது குறித்து மக்கள் ஓரளவு புரிந்து கொள்ள வேண்டும்.

முன்னதாக, இந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகள் தேர்தலுக்கு முன்பு மக்களிடம் உரையாற்றி, இந்த நாட்டில் போரை முடிவுக்குக் கொண்டுவந்தோம், இந்த நாட்டில் நீர்த்தேக்கங்களை உருவாக்கினோம், நாட்டை அபிவிருத்தி செய்தோம் என்று கூறினர். ஆனால், அனுரகுமார உள்ளிட்ட ஜே.வி.பி. இன்னும் கூட்டங்களுக்குச் சென்று இந்த நாட்டில் திருட்டு, மோசடி மற்றும் ஊழலை நிறுத்துவோம் என்று கூறுகிறது.

ஜனாதிபதி அனுரகுமார ஏழு மாதங்களுக்கும் மேலாக ஜனாதிபதியாக இருந்து வருகிறார். ஆனால், ஜனாதிபதி இன்றுவரை ஒரு திருடனையும் பிடிக்கவில்லை. அவர் என்ன திருட்டு செய்தார் என்பதை மக்களுக்குக் காட்டவில்லை. திருட்டை நிறுத்துவேன் என்று சொல்வதற்கு முன்பு இந்த நாட்டில் என்ன திருட்டு நடந்தது என்பதை மக்களுக்குச் சொல்லுங்கள். ஆரம்பத்தில் இருந்தே நீங்கள் சொல்லி வந்த கதைகள் அனைத்தும் பொய்கள் என்பது இப்போது மக்களுக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டு மக்களுக்கு இலாபத்தில் மின்சாரம் வழங்குவதாக நீங்கள் சொன்ன பொய் இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு மலிவான விலையில் எரிபொருள் மற்றும் உணவு வழங்குவதாகவும், அவர்களின் சம்பளத்தை அதிகரிப்பதாகவும் பல பொய்யான வாக்குறுதிகளை அவர்கள் அளித்துள்ளனர், அவை அனைத்தும் பொய்களாக மாறிவிட்டன. இந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகள் மீது ஜனாதிபதி அனுர பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தினார்.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகச் செய்யப்பட்டது என்னவென்றால், இந்த நாட்டிற்கு மகத்தான சேவையைச் செய்து நாட்டை பயங்கரவாதத்திலிருந்து காப்பாற்றிய தலைவர்களைக் குற்றம் சாட்டுவதும், அவர்கள் தீய நோக்கங்களுடன் திருடியதாகக் குற்றம் சாட்டுவதும் ஆகும். நீங்கள் இனி எதிர்க்கட்சி உறுப்பினர் அல்ல. இப்போது இந்த நாட்டின் ஜனாதிபதி. திருடர்களைப் பிடித்து திருட்டை நிறுத்துகிறேன் என்று மட்டும் சொல்லிக் கொண்டிருக்காமல், கூட்டங்களுக்குச் சென்று நாட்டுக்காக நீங்கள் செய்த பணிகளைப் பற்றி எங்களிடம் கூறுங்கள். இனி மக்களை ஏமாற்றி, மக்களின் பொருளாதாரத்தையும், நாட்டையும் வீழ்த்தாதீர்கள்" என்றார்.

# ஒருவர் பலி; ஒருவர் படுகாயம்



'குடு சலிந்த' எனப்படும் சலிந்து மல்ஷிக என்பவரின் தலைமையில் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மேற்கு மாலமுல்ல பகுதியில் உள்ள ஒரு வீட்டில் நடைபெற்ற விருந்துபசாரத்தின் போது, மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு அடையாளம் தெரியாத நபர்களால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸார் கூறியுள்ளனர் .

துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயமடைந்த நிலையில், ஒருவர் பாணந்துறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மேற்கு மாலமுல்ல பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுக்கு T-56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை ஹிரண பொலிஸார் ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பல்வேறு தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# "கொழும்பு நகரத்தை அழகான நகரமாக மாற்றுவோம்"

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கொழும்பு மாநகர சபையின் வருடாந்த வருமானம் 30 பில்லியன் ரூபாவாகும். கொழும்பில் ஒரு வசதிபடைத்த நகரசபை உள்ளது. இந்த நகர சபையில் என்ன குறைவு? இந்தப் பகுதிகளை எவ்வளவு முன்னேற்ற முடியும்? மக்கள் பற்றிய எந்த உணர்வும் இல்லை.

மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டிய எந்த தேவையும் இல்லை.

நாம் இதைச் சொன்னாலும், நாம் எதுவும் செய்ய முடியாது.

கொழும்பு மாநகர சபையைப் பற்றி நாம் நினைக்கும் போது, பொதுவாக ஒரு பெரும் திருட்டுக்கள் நிறைந்த இடம் பற்றித்தான் எமக்கு நினைவுக்கு வரும். நகர சபையைப் பற்றிய நமது பிம்பம் என்னவென்றால், அது பணத்தை வீணடிக்கிற, நம்மை இங்கும் அங்கும் அலையச் செய்கிற, எதையும் செய்து முடிக்க இயலாத ஒரு இடம்.

இந்த நிலை மாற வேண்டும். இந்த நாட்டை மாற்றும் பயணத்தை இந்த நாட்டு மக்கள் 2024ஆம் ஆண்டு தொடங்கினர்.

இந்த நாட்டின் வரலாற்றை மாற்றியமைத்த இரண்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன, ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல். அதன் மூலம், இப்போது அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அரசாங்கம் எம்மிடம் உள்ளது. உங்கள் அனைவரின் குரலையும், உங்கள் அனைவரின் தேவைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அரசாங்கம் எங்களிடம் உள்ளது.

எதிர்கட்கள் எங்களைப் பற்றி பல விடயங்களையும் சொல்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும், ஆனால், நாங்கள் திருடுகிறோம் என்று அவர்களால் சொல்ல முடியாது. நாங்கள் மக்களின் பணத்தைப் பாதுகாக்கிறோம். தோழர் அனுரகுமார வெற்றி பெற்ற நாளிலிருந்து, ஒரு அரசாங்கம் எப்படி இருக்க வேண்டும் என்பதை நாங்கள் காட்டி வருகிறோம்.

இந்த முகங்களைப் பார்க்கும் போது, நாம் என்ன சொல்ல முடியும்? மே 6ஆம் திகதி கொழும்பு நகரை தேசிய மக்கள் சக்தி வெல்லும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எமது சகோதரி விரோய் மேயராக தெரிவாவார்.

அதை மறுபடியும் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

இந்த நகரத்தில் உங்களை நன்கு அறிந்த ஒரு மேயர் இப்போது உங்களிடம் இருக்கிறார், அவரை நீங்கள் அணுகி பேசலாம். அவர் திறமையான ஒரு குழுவுடன் மேயராகப் போகிறார். நாம் உண்மையிலேயே பெருமைப்படும் வகையில் இந்த நகரத்தை அபிவிருத்தி செய்து அழகுபடுத்த வேண்டும் என்ற மிகுந்த ஆசை அவருக்கு இருக்கிறது.

கொழும்பு நகரம் மிகவும் சிறப்பு வாய்ந்த இடம். இந்தப் பகுதி இன்னும் தனித்துவமான ஒன்றையும் கொண்டுள்ளது.

நான் இங்கு வந்தபோது, ஒரு அழகான கோவிலைக் கடந்து சென்றேன். எதிரே ஒரு புத்தர் சிலை. இங்கு அன்மை மரியாளின் சிலை உள்ளது. பள்ளிவாயல் வெகு தொலைவில் இல்லை. இந்தப் பன்முகத்தன்மை எமக்கு மதிப்பைக் கொண்டுவருகிறது. இது ஒரு சிறிய இடத்தில் அமைந்திருந்தாலும், ஒருவருக்கொருவர் புரிதலையும் உணர்வுகளையும் அதிகரிக்கும் இடமாகும். அருகிலுள்ள கடைக்குச் சென்றாலும் சுவையான உணவு கிடைக்கும். அந்த சுவை வேறு எங்கும் கிடைக்காது.

மேலும், இந்த ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட எங்கள் முதலாவது வரவு-செலவுத்திட்டதில், பாலர் பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டது. வீதிகள் அமைக்க பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. நீர் முகாமைத்துவம், கழிவு மற்றும் வடிகால் அமைப்புகளை நிர்மாணிப்பதற்கு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நீங்கள் நீண்ட காலமாக அனுபவித்து வரும் பிரச்சினைகளைத் தீர்க்கவும், அவற்றுக்கு நிவாரணம் வழங்கவும் தேவையான ஏற்பாடுகளை நாங்கள் ஒதுக்கியுள்ளோம். அவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள அந்தப் பணம், பல தியாகங்கள் மூலம் மக்களுக்காகச் சேகரிக்கப்பட்ட பணம், நாம் அவற்றை திருடர்களிடம் ஒப்படைக்க முடியாது. அதனால்தான் நகர சபையை தூய்மைப்படுத்த வேண்டும்.

நாம் பொருளாதார வளர்ச்சியை அடைய வேண்டும். குறிப்பாக இளைஞர்கள் யுவதிகளுக்கு, பெண்களுக்கு சுயதொழில்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றை முறையாக செயற்படுத்தக்கூடிய நம்பகமானவர்களை உருவாக்குவது முக்கியம்.

அவற்றை செயற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. அதனால்தான் இங்குள்ளர்களைப் போன்ற திறமையான குழுவை நகர சபைக்கு தெரிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

# “அரசியல் தலையீட்டையே அனுர அரசும் செய்கின்றது”

■ நிதர்ஷன் வினோத்

“அரசியல் தலையீட்டற்ற ஆட்சியை ஏற்படுத்துவோம் என ஆட்சி அதிகாரத்தை எடுத்துக்கொண்ட இன்றைய அரசும் கடந்தகால ஆட்சியாளர்கள் போன்றே அரசியல் தலையீடுகளை செய்கின்றது” என இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது

யாழ். ஊடக அமையத்தில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட செயலளர் செ.சிவசுதன் செவ்வாய்க்கிழமை (29) ஊடக சந்திப்பொன்றை மேற்கொண்டு இவ்வாறு தெரிவித்த அவர்



மேலும் கூறுகையில், “இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் வெகுஜன அமைப்புகளுடன் இணைந்து உழைப்பாளர் தினத்தைக் (மே தினம்) கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது

ஆசிரியர் மற்றும் அத்துறைசார் தரப்பினரது ஊதியம் அதிகரிப்பு, கல்வித்துறையில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது, மக்களின் காணி நிலங்கள் விடுவிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துக் குறித்த மே தின பேரணியானது வரும் 1 ஆம் திகதி முற்பகல் இடம்பெறவுள்ளது.

யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள குறித்த மே தினப் பேரணியானது யாழ். நகரின் பிரதான சாலைகளூடாக பேரணியாகச் சென்று யாழ். பொது நூலகம் முன்பாக ஒன்று கூடி பேரணிக் கூட்டம் நடைபெறவுள்ளது.”

மேலும், குறித்த பேரணியில் அனைத்து துறைசார் தரப்பினரும் ஆதரவை வழங்கி குறித்த பேரணியை வலுப்படுத்துவது அவசியம் என்றும் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆடை ஏற்றுமதிக்கு சமமான சுங்கவரி நன்மைகளை எதிர்பார்க்கும் JAAF

SRI LANKA APPAREL
SEAMLESS SOLUTIONS

வொஷிங்டனில், அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலகத்துடன்(USTR) இலங்கை அரசாங்கம் நடத்திய இணக்கமான பேச்சுவார்த்தைகள் குறித்து ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் (JAAF) தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளது.

மேலும், இலங்கை மற்றும் அமெரிக்காவுக்கு இடையே நடுநிலையான மற்றும் நியாயமான வர்த்தக உறவுகளை வளர்ப்பதற்கு முன்னுரிமை அளித்ததற்காக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் இலங்கை தூதரக குழுவினருக்கு JAAF தனது நன்றியைத் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, இலங்கையின் ஆடைத் தொழிற்துறைக்கு மிகவும் முக்கியமான மற்றும் நீண்டகால வணிக கூட்டாளியாகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும், இந்தத் தொழிற்துறை நேரடியாக 350,000 பேருக்கும், நாடு முழுவதும் மேலும் 700,000 பேரின் வாழ்வாதாரத்திற்கும் ஆதரவாக உள்ளது. எனவே, தற்போதுள்ள வர்த்தக சுங்க வரிகளை நீக்குவதற்கும், சர்வதேச வணிக சந்தையில் இலங்கையின் உற்பத்திப் பொருட்களின் போட்டித் திறனை பராமரிப்பதற்கும் அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளை JAAF பாராட்டுகிறது.

எந்தவொரு புதிய சுங்கவரி ஒப்பந்தத்தின் மூலமும், ஆடை உற்பத்தி செய்யும் பிறநாடுகளுக்கு வழங்கப்படும் வர்த்தக சலுகைகள் இலங்கைக்கும் வழங்கப்படவேண்டும் என JAAF எதிர்பார்க்கிறது. இது தொடர்பாக, தேசிய பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்கும் மற்றும் நெறிமுறை உற்பத்தி நடைமுறைகளுக்காக உலகளவில் பெயர் பெற்ற இலங்கையின் ஆடைத் தொழிற்துறையின் நீண்டகால நிலைத்தன்மை மற்றும் வெற்றியைக் கருத்தில் கொள்ளுமாறு JAAF இருதரப்பினரையும் கேட்டுக்கொள்கிறது.

இரு தரப்பு வணிக ஒப்பந்தத்தை நோக்கி வெற்றிகரமான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்லும் போது, இலங்கையின் ஆடைத்தொழிற்துறை உற்பத்தி செயல் முறையின் ஒவ்வொரு படியையும் கண்காணிக்கும் திறன் (traceability), வெளிப்படைத் தன்மை மற்றும் நிலைத்தன்மைக்கான சர்வதேச தரங்களை பின்பற்றுகிறது என JAAF மீண்டும் வலியுறுத்துகிறது. எனவே, இலங்கைக்குச் சிறப்பு சுங்க வரிச்சலுகைகள் வழங்கும் போது இந்த அர்ப்பணிப்பைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதில் அது நம்பிக்கைகொண்டுள்ளது. சர்வதேச வணிக சந்தையில் இலங்கை பெற்றுள்ள நற்பெயர் மற்றும் போட்டித்திறன் ஆகியவற்றுடன், பொறுப்பான முறையில் ஆடைகளை வாங்க விரும்பும் வாடிக்கையாளர்களுக்கு இலங்கை நம்பகமான மற்றும் கவர்ச்சிகரமான இலக்கு என்பதில் JAAF உறுதியாக நம்பிக்கை கொண்டுள்ளது.

இரண்டு அரசாங்கங்களுக்கிடையே தொடரும் பேச்சுவார்த்தைகள் குறித்து JAAF நம்பிக்கையுடன் எதிர்நோக்கியுள்ளது. வணிகத்தை விரிவுபடுத்தவும், மேலும் முதலீடுகளை ஈர்க்கவும், இரு தரப்பினருக்கும் வெற்றியைத் தரக்கூடிய எதிர்கால வணிக ஒப்பந்தத்திற்கு தங்களது முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாக இந்த மன்றம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிவேக நெடுஞ்சாலையில் விபத்து: ஒருவர் பலி; மூவர் படுகாயம்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கஹதுடுவ மற்றும் கொட்டாவைக்கு இடையே 5.4 கி.மீ. தொலைவில் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும், மூன்று பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர், இரண்டு பிள்ளைகளின் தந்தையான 41 வயதுடைய தசநாயக்க அலுத்கே அமில என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர் விபத்துக்குள்ளான கார் ஒன்றை லொறியில் ஏற்றிக்கொண்டு, அதிவேக நெடுஞ்சாலையில் கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, கஹதுடுவ மற்றும் கொட்டாவைக்கு இடையில் வைத்து லொறியின் முன்பக்க சக்கரம் சேதமடைந்துள்ளது.

இந்நிலையில் அவர் தனது நண்பருக்கு தொலைபேசியில் அழைத்து தேவையான உதிரிப் பாகங்களைக் கொண்டு வரச் சொன்னதையடுத்து , உதிரிப் பாகங்களுடன் காரில் அந்த இடத்திற்குச் சென்ற நண்பன் லொறியின் முன்பக்கத்திலிருந்து



சிறிது தூரத்தில் காரை நிறுத்தி, லொறியின் ஓட்டுநர் முன் சக்கரத்தைப் பழுது பார்த்துக் கொண்டிருந்த போது, லொறியின் இடதுபுறத்தில் உள்ள அதிவேக நெடுஞ்சாலையின் பாதுகாப்பு வேலியில் அமர்ந்திருந்திருந்துள்ளார்.

அந்த நேரத்தில், மாத்தறையில் இருந்து வந்த ஒரு கார், லொறியின் முன் சக்கரத்தைப் பழுது பார்த்துக் கொண்டிருந்த ஓட்டுநர் மீது மோதி அவரை தள்ளிக்கொண்டு, முன்னால் நிறுத்தப்பட்டிருந்த காரின் பின்புறத்தில் மோதி இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்தில் லொறியின் ஓட்டுநர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் விபத்தை ஏற்படுத்திய மோட்டார் வாகனத்தின் ஓட்டுநர், அவரது மனைவி மற்றும் மகள் காயமடைந்து ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதிவேக போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி, தலைமைப் பரிசோதகர் சம்பத் பெரேராவின் அறிவுறுத்தலின் பேரில், பொறுப்பதிகாரி, தலைமைப் பரிசோதகர் அசோக கருணாதிலக்க ,பொலிஸ் சார்ஜென்ட்14612 சம்பத் மற்றும் 13516 ரத்னசிறி ஆகியோர் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# இலஞ்சம் பெற்ற சுகாதார பரிசோதகர் கைது

■ கனகராசா சரவணன்

மட்டு. கரடியனாறு பகுதியில் கடையொன்றுக்கு அனுமதிப் பத்திரம் வழங்க 6 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் பெற்ற பொது சுகாதார பரிசோதகர் ஒருவர் செவ்வாய்க்கிழமை (29) அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் உணவு கடை ஒன்றை அமைப்பதற்காக கரடியனாறு சுகாதார பிரிவில் கடமையாற்றி வரும் பொது சுகாதார பரிசோதகர் ஒருவரிடம் கோரியபோது அவர் இலஞ்சமாக 6 ஆயிரம் ரூபாவை கோரியுள்ளார்.

குறித்த கடை உரிமையாளர் இது தொடர்பாக கொழும்பிலுள்ள இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ததையடுத்து அவர்களின் வழிகாட்டலில் செவ்வாய்க்கிழமை (29) அன்று பகல் கரடியனாறு பகுதியில் குறித்த அதிகாரிகள் மாறுவேடத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டு, பொது சுகாதார பரிசோதகர் கடை உரிமையாளரிடமிருந்து இலஞ்சமாக 6 ஆயிரம் ரூபாவை பெற்று கொண்ட நிலையில் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 54 வயதுடையவர் எனவும் இவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கதிர்காமம் சென்ற ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர்

■ சுமனசிறி குணதிலக்க

இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ், செவ்வாய்க்கிழமை (28) அன்று கதிர்காமம் புனித ஸ்தலத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க கிரிவெஹர சைத்தியவை தரிசனம் செய்த பின்னர், கதிர்காம ஆலயத்திற்குச் சென்று ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

பின்னர் அவர் பஸ்நாயக நிலமே தண்டிஷன் விக்ரமரத்ன குணசேகரவைச் சந்தித்து, கலந்துரையாடியுள்ளதுடன், நிலமே உயர்ஸ்தானிகருக்கு ஒரு நினைவுப் பரிசு வழங்கியுள்ளார்.

# 35 வருடங்களுக்கு பின்னர் பேருந்து சேவை

■ நிதர்ஷன் வினோத்

35 வருடங்களின் பின்னர் காங்கேசன்துறை - பலாலி இடையிலான அரச பேருந்து சேவை செவ்வாய்க்கிழமை(29) அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யுத்தம் காரணமாக கடந்த 35 வருடங்களாக உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்ட குறித்த பகுதியூடாக பொதுமக்கள் நடமாட முடியாத சூழல் காணப்பட்டது. இதன் காரணமாக பயணிகள் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வரை மாத்திரமே பயணம் செய்து வந்தனர்.

கடந்த 10ஆம் திகதி நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்ட பலாலி வீதி வரை செவ்வாய்க்கிழமை(29) பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது.

பேருந்து சேவை நேர அட்டவணை தொடர்பாகப் பின்னர் அறியத் தருவதாகப் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார். குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் பவானந்தராஜா,



இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் ஜீவக புரசிங்க, மற்றும் போக்குவரத்து சபை ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# யாழ்.பல்கலைக்கழக பொன் விழா நிகழ்வு

■ நிதர்சன் வினோத்

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் பொன்விழா நிகழ்வு திங்கட்கிழமை (28) அன்று மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் திங்கட்கிழமை (28)காலை இடம்பெற்ற பொன் விழா நிகழ்வில் கலைப்பீட வரலாற்றை வெளிப்படுத்தும் நூலொன்று வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா, கலைப் பீட பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம், பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்கள்,பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இன்னொரு அங்கமாகப் பல்கலைக்கழக கலைப்பீட வரலாற்றை வெளிப்படுத்தும் புகைப்படக் கண்காட்சியும் நடைபெற்றது.

















# துப்பாக்கிச்சூட்டுடன் தொடர்புடையவர் ஹெரோயினுடன் கைது

காலி - அஹுங்கல்ல பகுதியில் ஏப்ரல் 17 ஆம் திகதி நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர், 28 வயதுடைய ஊரகஸ்மன்ஹந்திய பகுதியைச் சேர்ந்தவர் ஆவார். குறித்த நபர் ஞாயிற்றுக்கிழமை(27) அன்று மாலை லேலிஹெத்துவ சந்திக்கு அருகில் 6 கிராம் 826 மில்லிகிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், கடந்த ஏப்ரல் 17ஆம் திகதி அஹுங்கல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில், ஒருவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ய முயன்ற குற்றச் சம்பவத்தில், துப்பாக்கி தாரியாகச் செயல்பட்டவர் என்பது தெரியவந்துள்ளது. மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அஹுங்கல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொந்தளிக்கிறது காஷ்மீர்: மிகக் கவனமாக கையாளவேண்டும்

காஷ்மீரில் நிலவும் அமைதியின்மை இந்தியாவிற்கு மட்டுமல்ல, இந்தப் பிராந்தியத்திற்கும் ஒரு பிரச்சினையாகும். பஹேல்காமில் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடந்த இரத்தக்களரியில், 26 சுற்றுலாப் பயணிகள் பலியாகினர். இந்ததுப்பாக்கிச் சூடு, 2019ஆம் ஆண்டுக்குப் பிறகு காஷ்மீரில் நடந்த மிக மோசமான பயங்கரவாதத் தாக்குதலாக வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.

இந்த பயங்கரவாதத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் வீரர்களோ அல்லது அரசு அதிகாரிகளோ அல்ல, இந்தியாவின் மிக அழகான பள்ளத்தாக்குகளில் ஒன்றில் விடுமுறைக்குச் சென்ற பொதுமக்களே பலியெடுக்கப்பட்டுள்ளனர். இதனையடுத்து, இந்தியாவும் பதிலுக்கு. பாகிஸ்தானும், அதிரடியான தீர்மானங்களை எடுத்துள்ளன.

இந்தத் தாக்குதலுக்குப் பின்னால் பாகிஸ்தான் இருப்பதாக இந்தியா கூறுகிறது. எனவே, பாகிஸ்தானுக்கு ஒரு உறுதியான பாடம் கற்பிக்க மோடி அரசாங்கம் உடனடியாக தயாராகி வருகிறது. ஆனால், இந்திய-பாகிஸ்தான் போர் என்பது முற்றிலும் பொருத்தமானதல்ல.

அந்தப் பிராந்தியமே நிலையற்றதாக மாறும்போது, அது இலங்கைத் தீவையும் பாதிக்கிறது. பயங்கரவாதிகளுக்குத் தகுந்த பதில்கள் வழங்கப்பட வேண்டும் என்றாலும், இரண்டு அணு ஆயுத நாடுகளுக்கு இடையிலான போர் முழு உலகிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

இந்தத் தாக்குதலுக்கு 'வலுவான பதிலடி' அளிப்பதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், உறுதியளித்துள்ளார்,

இந்திய இராணுவம் விரைவில் பாகிஸ்தானுக்குள் ஊடுருவும் என்றும், அதனைத் தவிர்க்க முடியாது என்றும் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா முகமது ஆசிப் தெரிவித்துள்ளார். ஆகையால், எப்போது வேண்டுமானாலும் இரு நாடுகளுக்கு இடையிலும் போர் ஏற்படும் அபாயம் உள்ளது.

இந்த நேரத்தில் உலகில் இரண்டு தீவிரப் போர்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான போர் தொடங்கி ஒரு வருடத்திற்கும் மேலாகிவிட்டது. இதனால் ஏற்படும் உயிர்களுக்கும் சொத்துக்களுக்கும் ஏற்படும் சேதம் மிகப்பெரியது.

அதேபோல், இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையிலான மோதலும் சிறிது நேரம் எடுத்து ஆயிரக்கணக்கான உயிர்களைக் கொன்றது. இந்த இரண்டு போர்களிலும், ஏராளமான மதிப்புமிக்க வீடுகளும் பல மாடிக் கட்டிடங்களும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இறந்தவர்களை விட, காயமடைந்தவர்களும், இறந்தவர்களைச் சார்ந்திருப்பவர்களும், அல்லது குழந்தைகள் மற்றும் பெண்களும் தான் போரின் விளைவுகளை அதிகம் அனுபவிக்கிறார்கள்.

இத்தகைய கசப்பான விளைவுகளை அனுபவித்து வரும் உலக மக்களுக்கு இன்னொரு போர் தேவையில்லை. போரின் இடிபாடுகளைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. ஆகையால், மிகச்சரியாக சிந்தித்து தீர்மானங்களை எடுக்கவேண்டிய பொறுப்பு, இந்தியா மற்றும் பாக்கிஸ்தான் கைகளிலேயே உள்ளது. இதனைதான் உலக நாடுகள் பல வலியுறுத்தியுள்ளன.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

பெண்கள் கட்டாயமாகத் தற்பாதுகாப்புக் கலைகளைக் கற்றேயாகவேண்டும். பண்டைக் காலத்தில் இருந்தே, நமது வீரப் பெண்மணிகள் எதிரிகளுடன் போராடும் வித்தைகளைக் கற்றிருந்தனர். வாள் வீச்சு, சிலம்பம், குதிரையேற்றம் போன்ற போரியல் பயிற்சிகளை, ஆண்களுக்கு நிகராகக் கற்றுக் கொண்டனர். இதனால் அவர்களின் இரத்தத்தில், வீரம் செறிந்திருந்தது.

இன்று, பெண்களை மதிக்காது அவமானப்படுத்தும் கயவர்கள் கூட்டம் அதிகமாகிவிட்டார்கள். பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை; அதனால், பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்த வண்ணமிருக்கின்றன.

இத்தகைய சூழ்நிலைகளைப் பெண்கள் எதிர்கொண்டே ஆகவேண்டும். பெண்கள் தமக்கான அநீதிகளுக்கு எதிராகத் துணிச்சலுடன் போராட வேண்டும். தற்காப்புக் கலைகளைக் கற்றுக் கொண்டால், எவருக்கும், எந்த நேரத்திலும் பயப்படத் தேவையில்லை.

ஆண், பெண் பேதமின்றி, தற்பாதுகாப்புக் கலைகளை அனைவரும் கற்றுக்கொண்டால், மனவுறுதி, வீரம், தேகபலம் எல்லாமே இணைந்துவிடுகின்றன. பெண்கள் சளைத்தவர்கள் அல்ல; எதிர்கொள்பவர்கள்.

-பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### அசுத்தமான சூழல்

கிளிநொச்சி-பளை பேருந்து தரிப்பிடத்தில் உள்ள பொது மலசலக் கூடமானது பராமரிப்பின்றி அசுத்தமாகக் காணப்படுவதால் பேருந்து தரிப்பிடம் முழுவதும் துர்நாற்றம் வீசிய வண்ணம் உள்ளது.

மலசலக் கூடத்தின் பின்புறத்தில் கழிவு நீர் தேங்கியுள்ளதால், மரங்கள் புற்கள் அதிக அளவில் வளர்ந்து நுளம்புகள், பெருகும் அபாயகரமாகக் ஏற்பட்டுள்ளது.

அத்துடன், அப்பகுதிகளில் ஈக்கள் அதிக அளவு காணப்படுவதால், மரக்கறி சந்தை, மீன் சந்தையிலுள்ள வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கையில் அசௌகரியம் ஏற்படுகின்றது. மேலம், கொள்வனவாளர்கள் வியாபாரப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது, ஈக்கள் நிற்பதால் அசுத்தமான பொருட்கள் என மரக்கறி, மீன்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்ய அச்சப்படுகின்றனர்.

மற்றும் மீன் சந்தையின் கழிவுகளும் அங்கங்கே காணப்படுவதால் அதில் இருந்தும் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் சந்தைக்கு வரும் வாடிக்கையாளர்கள் பல சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர்

இதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதேச சபை பல தடவை தமக்கு வாக்குறுதி கொடுத்தும் தாம் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வருவதாகவும் பிரதேச சபையில் தமக்கு நம்பிக்கை இல்லை எனவும் மக்கள் கூறுகின்றனர்.

மேலும் பொதுச் சந்தை கட்டடத் தொகுதியின் நடுப்பகுதியில் தற்பொழுது பெய்த மழை காரணத்தால் நீர் தேங்கி நிற்பதுடன் சந்தைக்கு வரும் வாடிக்கையாளர்கள் இது நீரினால் பாரிய சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக அதிகாரிகள் கவனம் செலுத்தி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- பு.கஜிந்தன்



எம்.எஸ்.எம்.ஐயூப்

# ஆறாண்டுகளாக தொடரும் சூத்திரதாரி பற்றிய சர்ச்சை

கடந்த ஆறு வருடங்களாக ஒவ்வொரு எப்ரல் மாதத்திலும் 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்கள் ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பிடித்துக்கொள்கிறது. கத்தோலிக்க திருச்சபை அன்று முதல் ஒவ்வொரு வருடமும் அப்பயங்கரவாத தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்காமையிட்டு பதவியில் இருக்கும் அரசாங்கத்தை சாடி வருகிறது.

நீதியென்று அவர்கள் பணத்தைக் கேட்கவில்லை. இழந்த உயிர்களைக் கேட்கவும் இல்லை. இந்தத் தாக்குதல்களின் பின்னால் இயங்கிய சூத்திரதாரி யார் என்பதை விசாரணைகள் மூலம் அம்பலப்படுத்துமாறும் இதற்கு காரணமானவர்களுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்பதுமே அவர்களது கோரிக்கையாக இருக்கிறது.

இத்தாக்குதல்களைப் பற்றி இது வரை நீதிமன்ற விசாரணைகள் உள்ளிட்ட பத்துக்கு மேற்பட்ட உள்நாட்டு விசாரணைகள் நடைபெற்று இருக்கின்றன. பல வெளிநாட்டு விசாரணைகளும் நடைபெற்று இருக்கின்றன. சில நீதிமன்ற விசாரணைகள் இன்னமும் முடிவடையவில்லை. முடிவடைந்த விசாரணைகள் எதன் மூலமும் இந்த சூத்திரதாரி பிரச்சினை தீரவில்லை. எனவே தாக்குதலின் பாதிக்கப்பட்ட பிரதான சமூகமான கத்தோலிக்க சமுகம் அவ்விசாரணைகள் விடயத்தில் திருப்தியடையவில்லை.

அதேவேளை, சில அரசியல் கட்சிகளும் இதுவரை நடைபெற்ற விசாரணைகள் விடயத்தில் திருப்தியடையவில்லை. அவர்கள் இத்தாக்குதல்களின் சூத்திரதாரி என்று நினைத்தவர்கள் சூத்திரதாரிகளாக எந்தவொரு விசாரணை மூலமும் நிரூபிக்கப்படவோ தீர்ப்பளிக்கப்படவோ இல்லை என்பதே அவர்களது மனக்குறையாகும்.

காத்தான்குடியைச் சேர்ந்த சஹ்ரான ஹாஷிம் என்பவரே மூன்று உல்லாச பிரயாண ஹோட்டல்கள் மீதும் மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி நடத்தப்பட்ட இத்தற்கொலை தாக்குதல்களுக்குத் தலைமை தாங்கியதாகக் கூறப்படுகிறது.

தாக்குதல் இடம்பெற்ற நாளுக்கு மறுநாள் முதல், மூன்று விசாரணைக் குழுக்கள் (கமிட்டிகள்), ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டு அவற்றின் அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்குப் புறம்பாக ஜனாதிபதி ஒருவர் உள்ளிட்ட பாதுகாப்புக்குப் பொறுப்பான பலருக்கு எதிராக அடிப்படை உரிமை வழக்கொன்று முடிவடைந்துள்ளது. அவ்வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட சிலர் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

குண்டு வெடிப்புக்களோடு பல்வேறு விதமாக சம்பந்தப்பட்ட சஹ்ரானின் இயக்கமான தேசிய தவ்ஹீத் ஜமாஅத் இயக்கத்தைச் சேர்ந்த 25 பேருக்கு எதிராக குற்றவியல் வழக்கொன்றும் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட 108 பேர் நட்டஈடு கோரி ஒரு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவற்றுக்குப் பறம்பாக அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, இந்தியா, சீனா, பாகிஸ்தான், நியூசிலாந்து, டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளின் விசாரணைக் குழுக்களும் இண்டர்போல் சர்வதேச பொலிஸாரும் இத்தாக்குதல்களைப் பற்றி விசாரணைகளை நடத்தியுள்ளன. எனினும், இந்நாட்டுக் கிறிஸ்தவ மக்கள் அவற்றின் தீர்ப்புக்களை ஏற்றுக்கொள்ளவில்லை.

எனவே, இலங்கை கத்தோலிக்க மக்களின் தலைவரான கர்தினால் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்று பதவிக்கு வந்த சகல ஜனாதிபதிகளையும் வலியுறுத்தி வருகிறார்.

கர்தினால் முதலில் மைத்திரிபாலவிடம் நீதி கேட்டார். ஆயினும் மைத்திரிபாலவின் மெத்தனப் போக்கே தாக்குதலுக்குக் காரணம் என்ற கருத்து வலுப்பெற்று வரவே கர்தினால் அவரை சாடத் தொடங்கினார்.

தாம் பதவிக்கு வந்து தாக்குதலின் சூத்திரதாரியைக் கண்டுபிடித்த தண்டனை வழங்குவேன் என்பதைப் போல, அப்போது ஜனாதிபதி பதவியில் கண் வைத்திருந்த கோட்டாபய கூறினார். எனவே, 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கத்தோலிக்க மக்களில் பெரும்பான்மையினர் கோட்டாபயவுக்கே வாக்களித்தனர்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கோட்டா உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விடயத்தில் புதிதாக எதுவும் செய்யவில்லை. எனினும், அவர் பதவிக்கு வந்து சில நாட்களில் கருத்து தெரிவித்த கர்தினால் விசாரணைகள் தொடர்பாக தமது திருப்தியைத் தெரிவித்தார்.

எனினும், படிபபடியாக கத்தோலிக்கத் தலைவர்கள் கோட்டாவின் அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுக்கவே ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நவுபர் மௌலவியே தாக்குதலின் சூத்திரதாரி என்று 2021 கோட்டாவின் அரசாங்கத்தின் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சராகவிருந்த சரத் வீரசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார். கத்தோலிக்கத் தலைவர்கள் அதனை ஏற்கத் தயாராகவில்லை.

இதனிடையே 2020களில் கோட்டாவின் ஆதரவாளர்களே தாக்குதலின் பின்னால் இயங்கியுள்ளனர் என்று ஒரு கருத்து எங்கோ முளைத்து பரவியது. கட்டுக்கதையாயினும் விரும்கத்தக்கதாயின், மக்கள் அதனை நம்புவார்கள் என்று தொடர்பாடல் பற்றிய நிபுணர்கள் கூறுகிறார்கள். எனவே, அக்கதைக்கு சிறகு முளைத்தது. இப்போது பலர் அதனை நம்புகிறார்கள். கத்தோலிக்கத் தலைவர்களும் அதனை நம்புவதாகவே தெரிகிறது.

"வேட்டையைத் தூக்கிச் செல்கிறவனே வேட்டைக்காரன்" என்ற சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே பலர் இக்கதையை நியாயப்படுத்துகிறார்கள். அதாவது கோட்டாவே பயங்கரவாத தாக்குதலால் பயன் பெற்றார். எனவே அவரே சூத்திரதாரி என்றே அவர்கள் வாதிடுகின்றனர்.

இது நடக்க முடியாத விடயம் அல்ல. ஆனால், அதனை நிரூபிக்க எவ்வித ஆதாரமும் அக்கருத்தைத் தெரிவிப்பவர்கள் முன்வைப்பதில்லை. 2023ஆம் ஆண்டு பிரிட்டனின் செனல்4 என்ற தொலைக்காட்சி சேவையுடன் நேர்காணல் ஒன்றில் கலந்து கொண்ட கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவனேசதுறை சந்திரகாந்தனின் முன்னாள் செயலாளர் அசாத் மௌலானாவும் இந்தக் கதையையே கூறினார்.

2018ஆம் ஆண்டு தாம் பிள்ளையானின் ஆலோசனைப் படி, அரச உளவுச் செவையின் அதிபராக இருந்த மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேயை சந்தித்ததாகவும் சலேயின் வேண்டுகோளுக்கு இணங்க, தாம் அவருக்கும் தேசிய தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பின் தலைவர் சஹ்ரான் ஹாஷிமுக்கும் இடையிலான சந்திப்பொன்றை ஏற்பாடு செய்ததாகவும் கோட்டா பதவிக்கு வர வசதியாக நாட்டில் பதற்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று அப்போது சலே கூறியதாகவும் மௌலானா செனல்4 தொலைக்காட்சி நிகழ்ச்சியின் போது கூறினார். சலேயின் அக்கருத்துப் படியே உயர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன என்பதே அவரது வாதமாகும்.

பின்னர் கடந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. தாம் பயங்கரவாத தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்க நடவடிக்கை எடுப்பதாகத் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தேர்தல் மேடைகளில் கூறினார். எனவே, கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் ஆகியவற்றின் போது, கத்தோலிக்க மக்கள் தேசிய மக்கள் சக்திக்கே ஆதரவளித்தனர்.

ஆயினும், அனுரகுமார பதவிக்கு வந்து ஆறு மாதங்கள் கடந்த போதும், அந்த விடயத்தில் எதுவும் நடக்கவில்லை. எனவே, தாக்குதலுக்கு ஆறு வருடங்கள் பூர்த்தியாகும் இவ்வருடம் ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் சாதகமான எதுவும் நடைபெறாவிட்டால் தமது மக்கள் மீண்டும் வீதியில் இறங்கிப் போராட நேரிடும் என்று கர்தினால் அண்மையில் எச்சரிக்கை விடுத்தார்.

அதனாலோ என்னவோ ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் விசாரணைகளில் பல விடயங்கள் வெளிவரும் என்று ஜனாதிபதி அண்மையில் கூறினார். கத்தோலிக்கத் தலைவர்கள் அதனை நம்பினார்களோ என்னவோ ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் கர்தினால் கூறியதைப் போல் ஆர்ப்பாட்டங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

ஏப்ரல் 20 ஆம் திகதி ஜனாதிபதி தமது அலுவலகத்தில் இருந்த உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக மைத்திரிபால நியமித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையையும் அதனோடு சம்பந்தப்பட்ட இரகசிய ஆவணங்களையும் விசாரணைக்காக இரகசிய பொலிஸாரிடம் கையளித்தார். உண்மையிலேயே அவரால் அது மட்டுமே செய்ய முடியும். இது வரை தெரிய வராத தாக்குதல் சூத்திரதாரி ஒருவர் இருந்தாலும் அதனை ஜனாதிபதியால் அம்பலப்படுத்த முடியாது. அதனை விசாரணையாளர்களே செய்ய வேண்டும்.

இதற்கிடையில் 2006ஆம் ஆண்டு கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் சிவசுப்ரமணியம் ரவீந்திரநாத் காணாமல்போன சம்பவம் தொடர்பாக பிள்ளையான் கடந்த 8ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவர் மூலம் உயர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பாக பல தகவல்கள் கிடைத்தாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால கடந்த 10ஆம் திகதி பாராளுமன்றத்ட்தில் கூறினார். அந்த சம்பவத்தோடு தெற்கில் சில அரசியல்வாதிகள் கலக்கமடைந்தமை காணக்கூடியதாக இருந்தது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தடுப்பு காவலில் இருக்கும் பிள்ளையானுடன் தொலைபேசியில் பேசுவதற்கு இரகசிய பொலிஸ் பணிப்பாளரிடம் அனுமதி கேட்டிருந்தார். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. பின்னர் கடும் பேரினவாதி என தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களால் கருதப்படும் பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தாம் பிள்ளையனின் சட்டத்தரணி என்று கூறி பிள்ளையானை சந்திக்க அனுமதி கோரினார் அதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அத்தோடு தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரானே என்று 2020ஆம் ஆண்டு அமெரிக்க எப்.பி.ஐ. நிறுவனம் வெளியிட்ட அறிக்கையொன்று இதே நாட்களில் வெளியே வந்துள்ளது. அவற்றின் மூலம் இதுவரை அம்பலமாகாத சூத்திரதாரி எவரும் இல்லை என்று கூற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

## சமூக மயமாக்கலில் பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு

# கல்வியுடனான தீர்வு



தேவசௌமியா, ஞா.
கல்வியியல் சிறப்பு கற்கை மாணவி.
நான்காம் வருடம், கல்வி, பிள்ளை நலத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்


உலகிலே நாளுக்கு நாள் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. சிறுபான்மையினர் வன்முறைகள், ஆயுத வன்முறைகள், போதைப்பொருள் சார்ந்த வன்முறைகள், இளைஞர்களினால் ஏற்படும் வன்முறைகள் என பல்வேறு வன்முறைகள் அடையாளப்படுத்தப்பட்டு நோக்கப்படுகிறது. உலகில் அதிகமாகப் பாதிக்கப்படும் சமூகக் குழுக்களாக பெண்களே காணப்படுகின்றனர். நாளுக்கு நாள் பெண்கள் வன்முறையானது அதிகரித்துக் கொண்டே வருகிறது. 15–19 வயதுக்கு இடைப்பட்ட வயது பிரிவினர் அதிகளவில் வன்முறைகளை சந்திக்கின்றனர் என கூறலாம்.



ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு சாற்றுரை இவ்வாறு கூறுகிறது: “காலங்காலமாய் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சமனில்லா செல்வாக்கின் வெளிப்பாடே பெண்களுக்கு எதிரான வன்முறையாகும்”;, “ஆண்களை விடத் தாழ்ந்த நிலைக்குப் பெண்களைத் தள்ளும் இக்கட்டான சமுதாயச் செயல்பாடுகளுள் ஒன்று பெண்களுக்கு எதிரான வன்முறையாகும்”

அதன்படி “உலகம் மாறிவிட்டது” என்ற கோஷத்தை, நாம் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். “தொழில்நுட்ப ரீதியில் உலகம் வளர்ச்சி அடைந்துள்ளது”, “மனிதன் இன்னும் நாகரிகம் உள்ளவனாக மாறிவிட்டான்” போன்றவையும் நாம் அடிக்கடி கேட்பவை. ஆனால், பெண்களுக்கு எதிரான வன்முறை, தொடர்ச்சியானதாகவும் நிறுவனமயப்பட்டதாகவும் இருக்கிறது. இதில் மிகவும் கவலைக்குரிய விடயம் யாதெனில், பெண்களின் கருத்துரிமைகளுக்கான புதிய களங்களாகக் கருதப்பட்ட சமூக வலைத்தளங்களில், மிகப் பயங்கரமான வன்முறை அரங்கேறுகிறது.

இது, பாலியல் தாக்குதல்களாகப் பெண்களைக் குறி வைக்கிறது. வன்முறையாளர்கள் பாதுகாப்பாகவும் வன்முறைக்காளாகுவோர் அச்சத்துடனும் வாழ்கின்ற ஒரு சூழல் உருவாகியிருக்கிறது; இது தடுக்கப்பட வேண்டும். இதற்கெதிராக அனைவரும் திரண்டு குரல் கொடுப்பதும் இவ்வகையான இழிச் செயல்கள் நிறுத்தப்படுவது அவசியமாகிறது.

பெண்கள் பலருக்கு பொது வெளியாகவும் கருத்துச் சுதந்திரத்தின் களமாகவும் சமூக வலைத்தளங்கள் திகழ்கின்றன. அப்பொதுவெளியிலும் பெண்களுக்கு எதிரான பாலியல் ரீதியான தொந்தரவுகளும் தாக்குதல்களும் நிகழ்கின்றன. இது பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறையின் இன்னொரு வடிவமே என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

பெண்களுக்கு எதிரான ஆணாதிக்கமும் வக்கிரமும் இன்று நேற்று உருவானதல்ல. பெண்கள் மீதான ஒடுக்குமுறை அவர்களின் உயிரியல் அடிப்படையிலானதன்று. மாறாக, அதன் தோற்றத்துக்கு பொருளியல், சமூகப் பரிமாணங்கள் உள்ளன. எந்தக் காலத்திலும், சமூக உற்பத்தியில் பெண்களின் பங்கு, சமூக உற்பத்தி சக்திகளின் விருத்தியிலும் உற்பத்தி உறவுகளிலும் தங்கியிருந்துள்ளது. எனவே, பெண்கள் மீதான பால் அடிப்படையிலான ஆதிக்கமும் ஒடுக்கலும் முழுச் சமூகத்தினதும் சுரண்டல் அடிப்படையிலான உற்பத்தி உறவுகளில் இருந்து பிரித்து நோக்க இயலாது.

சமூக உற்பத்தியில், பெண்களுக்கு விதிக்கப்பட்ட இடம், சமூக அமைப்புகளின் மாற்றத்துடன் மாறி வந்துள்ளது. அதி தொன்மையான சமூகம், உற்பத்தி அடிப்படையில் அமைந்திருந்தது. உற்பத்தியின் பயன்கள், சமமாகப் பகிரப்பட்டன. உண்மையில், சமூக உற்பத்தியின் உயர்வில் பெண்களின் பங்கு, ஆண்களானதை விட மேலானதாக இருந்தது எனவும் கூறலாம். சமூகத்தில் பெண்களின் தாழ்வு, தனியார் சொத்துடைமையாலும் குடும்பம் எனும் அமைப்பாலும் நிர்ணயித்த வேலை ஒதுக்கீட்டாலும் உருவானது. வர்க்க அடிப்படையிலான வேலைப் பிரிவினை, எவ்வாறு தொடங்கியது என்றோ, அது எவ்வாறு பெண்கள் மீதான ஆதிக்கத்துக்கு இட்டுச் சென்றது என்றோ திட்டவட்டமாகக் கூற இயலாது.

எனினும், உற்பத்தி சாதனங்கள் மீது, (முதலில் மண்ணும் விவசாயக் கருவிகளும் விலங்குகளும்) தனியார் ஆதிக்கத்துக்கு உட்பட்டதோடேயே ஆணாதிக்கம் தொடங்கியது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. அதன் பின்பு, அடிமைகளையும் உற்பத்திக் கருவிகளையும் போன்று, பெண்களும் ஆணின் உடைமையாக நேர்ந்தது. பெண்களின் சமூக உற்பத்தி மூலம், அவர்களுக்குப் பொருள் மீது, முக்கியமாக உற்பத்தி சாதனங்கள் மீது, ஆதிக்கம் ஏற்படாதவாறு, சொத்துடைமை ஆண்களின் வசமாக்கபட்டது. இவ்வாறு, பெண்களின் உற்பத்தி பங்களிப்பு, ஆணுக்குச் சேவையாற்றுவதும் அடுத்த தலைமுறையின் தோற்றமும் பராமரிப்பும் என முதன்மை பெற்றன.

முதலாளித்துவத்தின் வருகை, பெண்ணை ஓர் உற்பத்திக் கருவியாக மட்டுமன்றி, பன்முகப்பட்ட நுகர்பொருளாகவும் வடிவமைத்தது. இன்றைய உலகமயமாக்கல் சூழலில், பெண்கள் மிகுந்த அடக்குமுறைகளுக்கு ஆளாகிறார்கள். குறிப்பாக, நுகர்வுக் கலாச்சாரம், பெண்களை ‘நவீனமாக்கி’, அவர்களுக்கு விடுதலை அளிப்பது போலத் தோற்றம் காட்டி, பெண்களை அடிப் படையான நிறுவன மயப்பட்ட அடக்குமுறைகளுக்குப் பேணுகிறது.

பெண்கள் மீதான ஒடுக்கு முறை என்பதை விரித்து நோக்கின், பல்வேறு தளங்களில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அவற்றின் சமூகத் தாக்கங்களையும் காணலாம்.

தென்னாசிய சமூக அமைப்பு சூழலில், பெண்களது வாழ்நிலையை வழிநடத்தும் கருத்தியல் சிந்தனை, நடைமுறைகளில் நிலவுடைமைக் கண்ணோட்டமே முன்னுரிமை வகித்து நிற்கிறது. ஆணாதிக்க சிந்தனை என்பதும் மேற்படி நிலவுடைமைக் கருத்தியலின் வழிவந்த ஒன்றேயாகும். அதன் காரணமாகவே, பெண்கள் இன்றும் ஆண்களை விடக் குறைவானவர்களாகக் கொள்ளப்பட்டு, சமத்துவமின்மைக்கு உள்ளாகிறார்கள். இதன் வெளிப்பாடுகளே, சமூக வலைத்தளங்களில் பெண்கள் மீது தொடுக்கப்படும் பாலியல் தாக்குதல்களின் அடிப்படையாகும்.

இலங்கையில், பெண்களுக்கான பொதுவெளிகள் இன்னமும் விரிவடையவில்லை, ஜனநாயக படவுமில்லை. இதில் கவனிக்க வேண்டிய விடயம், உலகின் முதலாவது பெண் பிரதமரைத் தந்த நாடு இலங்கை. இங்குதான், ஒரு பெண் ஜனாதிபதியாக 11 ஆண்டுகாலம் ஆட்சியில் இருந்தார். ஆனால், இலங்கையில் பெண்களுக்கான உரிமைகள் உறுதிசெய்யப்படவில்லை.

ஏனெனில், வெறுமனே பதவிகளுக்குப் பெண்கள் தெரிவாவது, பிரச்சினைகளுக்குத் தீர்வல்ல. பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளும் வன்முறைகளும் சமூகத்தில் நிறுவன மயப்படுத்தப்பட்ட கருத்தியல் ரீதியான ஒடுக்குமுறைகளைக் களைவதன் மூலமே, பெண்களின் விடுதலை சாத்தியமாகும்.

இன்று சமூக ஊடகங்களில், பயனர்களாகப் பலர் இருக்கிறார்கள். பெண்களுக்கு எதிரான வன்முறைகள், இத்தளங்களில் நடப்பதைப் பலர் பார்க்கிறார்கள். அவர்களில் பலர், அதற்கு எதிராகக் குரல் கொடுக்காமல் அப்பால் நகர்கிறார்கள். இன்னும் சிலர், அக்கருத்துக்கு ஆதரவு சேர்த்து, வன்முறையை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துகிறார்கள்.

இவ்விடத்தில் இரண்டு உதாரணங்களை இங்கு சுட்டிக் காட்டல் தகும். முதலாவது, அண்மைக் காலமாகப் பொதுவெளியில் இயங்கும் சமூகச் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக, முகநூலில் நிகழ்த்தப்பட்ட பாலியல் தாக்குதல். மிக மோசமான பாலியல் வசவை, வெளிப்படையாக இவர்களால் சமூக வலைத்தளங்களில் மேற்கொள்ள முடிகிறது; அதை அச்சமின்றி தொடரவும் முடிகிறது.

இது, நாம் வாழும் சமூகம் குறித்த பல கேள்விகளை எழுப்புகிறது. நாம் வாழும் உலகு மட்டுமன்றி, மெய் நிகர் வெளிகளும் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லாதனவாக மாறிவிட்டன என்பது, கவலை தருகிறது.

இந்தக் கட்டுரையை வாசிப்பவர்கள் பலர், சமூக வலைத்தளங்களில் பயனர்களாக இருப்பவர்கள். நீங்கள், நிச்சயம் பெண்களுக்கு எதிரான வசவுகளை, பாலியல் தொல்லைகளை, சமூக வலைத்தளங்களில் தரிசித்திருப்பீர்கள். ஆனால், அதற்கும் எனக்கும் தொடர்பில்லை என்று, அப்பால் நகர்ந்திருப்பீர்கள். உங்களுக்கு, மார்ட்டின் நெய்மோலரின் ‘அவர்கள் என்னைத் தேடி வந்தபோது’ என்ற கவிதையை நினைவூட்ட விரும்புகிறேன்.

இரண்டாவது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு மாணவர்கள், பகடிவதை என்பதன் பெயரால், நிகழ்நிலையில் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டமையும் அதற்குப் பல்கலைக்கழகம் எடுத்த நடவடிக்கையும் கவனிப்புக்குரியது. பகடிவதையின் பெயரால் இவ்வாறான நடத்தைகள், புதிய கட்டத்தைத் தொட்டுள்ளன. பல்கலைக்கழகங்களோ, “எமது வளாகத்தில் பகடிவதை இல்லை” என்று தொடர்ந்து சாதித்தாலும், சம்பங்கள் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. இவ்விரண்டு உதாரணங்களும், எமது சமூகம் அவசரமாகக் கணிப்பில் எடுக்க வேண்டிய சில விடயங்களைக் கோடிட்டுக் காட்டுகின்றன.



தென்னாசியச் சமூகங்களில் ஆணாதிக்கமும் பெண்ணடிமைத்தனமும் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நிறுவனமயப்படுத்தப்பட்டு உள்ளன. அந்த ஒடுக்குமுறை, பல்வேறு வடிவங்களில் தொடர்கிறது.

பெண் என்பவள் அடித்தோ, விரட்டியோ, துன்புறுத்தியோ ஆனால் அடக்கியாளப் பட வேண்டியவள் என்பதை, திரைப்படங்களும் தொலைக்காட்சி தொடர்களும் சொல்லிக் கொடுக்கின்றன. வன்முறைக்கு ஆளாகும் பெண், வீட்டிலோ வெளியிலோ அது குறித்து நம்பிக்கையுடன் பேசுவதில்லை. தன்னுடைய குரல் நிராகரிக்கப்படக் கூடும்; தான் அவமானப்படுத்தப் படக்கூடும்; அதை வைத்து, மற்றவர்கள் தவறாக நடக்கக் கூடும் என்கிற காரணங்கள் அதன் பின்னணியில் உள்ளன.

வன்முறை, அச்சுறுத்தல் என்கிற ஆயுதங்கள், பெண்களை அதே இடத்தில் இருத்தி வைக்கின்றன. இந்த ஆயுதங்களை ஏவுகிறவர்கள், ஆண்களாகவே உள்ளனர். இதன் வடிவங்களும் களங்களும் மாறி உள்ளனவே தவிர வன்முறை தொடர்கிறது.

இன்றும் பெண்களுக்கு எதிரான எல்லாக் கொடுமைகளுக்கும் பெண்கள் மீதே பழி போடுவது, கட்டுப்பாடுகள் விதிப்பது, என்பதுதான் பொதுப்புத்தி மனநிலை. ஆனால், மேற்கண்ட உண்மைகள் ஒட்டுமொத்த சமூகத்தை கௌவிக் கொண்டிருக்கும் தீராத நோயின் அறிகுறிகள் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

பெண்களின் ஜனநாயக வாழ்வுரிமைகளை மதிக்கும் உணர்வுகள் ஒவ்வொரு மனிதனிலும் உட்பொதிந்திருக்க வேண்டும். ஆணையும் பெண்ணையும் சரிசமமாகப் பார்க்கும் மனோநிலையைப் பாடசாலைகள், சிறுவயது முதலே உருவாக்க வேண்டும். இதை, ஒரு வளமான எதிர்கால சந்ததியை உருவாக்க விரும்பும் சமூகம் நிச்சயம் செய்யும்.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளுக்குத் தீர்வாகக் கல்வியின் ஊடாக மேற்கொள்ளக்கூடிய சில முக்கியமான நடவடிக்கைகள்:

### விழிப்புணர்வு மற்றும் கருத்துணர்வு அதிகரித்தல்:

பாடசாலைகள், கல்லூரி மற்றும் சமூக அமைப்புகளில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க வகுப்புகள், கருத்தரங்குகள், கருத்துரைகள் மற்றும் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டும். இதன் மூலம், மாணவர்களுக்கு பாலியல் வன்கொடுமைகளின் தீமைகள் மற்றும் அது சமூகத்திற்கு விளைவிக்கும் தீவிரப் பாதிப்புகளை விளக்க முடியும். “பாலியல் வன்கொடுமை” என்ற வார்த்தையின் அர்த்தத்தை சரியாக புரிந்து கொள்ளவும், பெண்களின் உடல் மற்றும் மன வளங்களை மதிப்பதற்கான முக்கியத்துவத்தை தெரிவிக்கவும்.

### குடும்பங்களில் கல்வி ஏற்படுத்துதல்:

மாணவர்களை மட்டும் அல்லாமல், பெற்றோர்களுக்கு மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு சமத்துவம் மற்றும் பெண்கள் உரிமைகள் பற்றி கல்வி அளிப்பது முக்கியம். பெற்றோர்கள், குறிப்பாக, தங்கள் பிள்ளைகளுக்கு பாலின சமத்துவம் மற்றும் ஏற்றுக்கொள்ளும் வாழ்க்கை முறைகள் பற்றி உரையாடல் நடத்துவதை ஊக்குவிக்க வேண்டும். உறுதிப்பத்திரம் உருவாக்குதல் குழந்தைகளுக்கு, பெற்றோர்களுக்கு, மற்றும் பாடசாலையில் உள்ள மன்றங்களுக்கு தலா உரிமைகள் மற்றும் சட்டங்கள் பற்றி கற்றுக்கொடுக்கவும்.

### சட்ட மற்றும் நெறிமுறைகள் பற்றி கல்வி:

மாணவர்களுக்கு மற்றும் சமூகத்துக்கு பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் தொடர்பான உள்ளனவற்றின் சட்ட அறிவை வழங்குவது முக்கியமானது. பாலியல் வன்கொடுமைகள் குறித்து சட்டங்கள் என்ன என்பதை, அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் தண்டனைகள் பற்றி தெளிவாக கற்றுக் கொடுக்க வேண்டும். பாலியல் அச்சுறுத்தல் மற்றும் சட்ட நடவடிக்கைகள், இவற்றை எதிர்க்கும் சட்டம், சமுதாயத்தினருக்கு எதிரான பாலியல் வன்கொடுமை தொடர்பாக அதிகாரப்பூர்வமான விழிப்புணர்வை ஏற்படுத்துவது.

மேலும், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் அத்தியாயம் 03இல் அடிப்படை உரிமைகள் 12(2) இல் பின்வருமாறு சமத்துவத்திற்கான உரிமையை எடுத்துக் காட்டுகின்றது. “இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் எந்தப் பிரஜைக்கும் ஓரங்காட்டுதல் ஆகாது” என கூறுகின்றது. அதன்படி பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களும் மனிதர்களே என இரு பாலரும் உணரும் போதே வன்முறைகள் அற்ற உலகை உருவாக்க முடியும்.

இன்று பொதுவெளியில் செயல்படும் கருத்துரைக்கும் போராடும் பெண்கள் அனைவரும், போற்றுதலுக்கு உரியவர்கள். அவர்கள் அனைவருக்குமாகப் போராடுகிறார்கள். அவர்கள் மீதான தாக்குதல், மறைமுகமாக எம்மீதானதும் எம்சமூகத்தின் வளமான எதிர்காலத்தின் மீதானதுமான தாக்குதல் என்பதை, நாம் உணர வேண்டும்; எதிர்வினையாற்ற வேண்டும்.



இஸ்லாமாபாத்

# “நாங்கள் தயார்”

இந்திய இராணுவம் விரைவில் பாகிஸ்தானுக்குள் ஊடுருவும் என்றும், அதனை தவிர்க்க முடியாது என்றும் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் கவாஜா முகமது ஆசிப் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத்தில் ராய்ட்டரஸ் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், “இராணுவ ஊடுருவல் நிகழும். தற்போது அது தவிர்க்க முடியாத ஒன்று என்பதால் நாங்கள் எங்கள் படைகளை பலப்படுத்தியுள்ளோம். தற்போதைய சூழலில் எத்தகைய யுக்திகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.” என்று பாதுகாப்பு அமைச்சர் கவாஜா முகமது ஆசிப் தெரிவித்துள்ளார்.

இந்தியா தாக்குதல் நடத்த உள்ளதற்கான சாத்தியம் குறித்து பாகிஸ்தான் இராணுவம் அரசுக்குத் தகவல் தெரிவித்துள்ளதாகவும் கவாஜா முகமது ஆசிப் கூறியுள்ளார். அதேநேரத்தில், விரைவில் ஊடுருவல் நிகழும் என்று அவர் நினைப்பதற்கான காரணங்கள் குறித்து அவர் கூறவில்லை.



பாகிஸ்தானின் அணு ஆயுத பிரயோகம் குறித்த கேள்விக்குப் பதில் அளித்த கவாஜா முகமது ஆசிப், “இவ்விஷயத்தில் பாகிஸ்தான் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கும். தேநேரத்தில், எங்கள் இருப்புக்கு நேரடி அச்சுறுத்தல் இருந்தால் மட்டுமே அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவோம்.” என்று தெரிவித்துள்ளார்.

போரைத் தவிர்க்கப் பாகிஸ்தான் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விளக்கிய கவாஜா முகமது ஆசிப், “வளைகுடா நாடுகள் மற்றும் சீனா உள்ளிட்ட நட்பு நாடுகளை அணுகினோம். பிரிட்டன், அமெரிக்கா மற்றும் பிற நாடுகளுக்கும் நிலைமை குறித்து விளக்கமளித்துள்ளோம். அரேபிய வளைகுடாவில் உள்ள எங்கள் நண்பர்கள் சிலர் இரு தரப்பினருடனும் பேசியுள்ளனர்.” என்று தெரிவித்துள்ளார்.

இந்தியாவும் பாகிஸ்தானும் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சீனா, திங்கட்கிழமை (28) வேண்டுகோள் விடுத்தது. மேலும், நிலைமையைத் தணிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் வரவேற்பதாகவும் அது கூறியது. இந்த விவகாரத்தில் தலையிடுவதிலிருந்து அமெரிக்கா ‘விலகி’ இருப்பதாக கவாஜா முகமது ஆசிப் தெரிவித்தார். இந்தியாவும் பாகிஸ்தானும் தங்களுக்கு இடையேயான உறவுகளை முடிவு செய்யும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த வாரம் கூறினார். எனினும், இரு தரப்பினருடனும் தொடர்பில் இருப்பதாகவும், ‘பொறுப்பான தீர்வை’ நோக்கிச் செயல்படுமாறு வலியுறுத்துவதாகவும் அமெரிக்க வெளியுறவுத்துறை கூறியுள்ளது.

பாகிஸ்தான்

## பாகிஸ்தானில் இருந்து இந்தியர்களும் வெளியேற்றம்

பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து, இந்தியாவின் நடவடிக்கைக்குப் பாகிஸ்தானும் பதிலடி கொடுத்துள்ளது.

அதன்படி, பாகிஸ்தானில் வசித்து வந்த இந்தியர்கள் உடனடியாக வெளியேற அந்நாட்டு அரசு உத்தரவிட்டது.

இந்நிலையில், கடந்த 6 நாட்களில் பாகிஸ்தானில் இருந்து 1,000 இந்தியர்கள் வாகா எல்லை வழியாக வெளியேறியுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. மேலும், இந்தியாவில்



இருந்து தற்போதுவரை 800 பாகிஸ்தானியர்கள் சொந்த நாட்டிற்கு திரும்பியுள்ளதாகவும் பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

ஸ்பெயின், போர்த்துக்கல்

## ஸ்பெயின், போர்த்துக்கலில் மிகப்பெரிய மின்தடை

ஐரோப்பிய நாடுகளான ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல் ஆகிய நாடுகளில், திடீரென மிகப்பெரிய அளவில் மின்தடை ஏற்பட்டது.

இதனால் சுரங்கப்பாதை நெட்வொர்க்ஸ், போன் லைன்கள், ஏடிஎம் மெஷின்கள், போக்குவரத்து டிராபிக் சிக்னல்கள் சேவை பாதிக்கப்பட்டன.

மேலும், பிரான்ஸ் தலைநகர் உள்ளிட்ட முக்கியமான இடங்களிலும் மின்தடை ஏற்பட்டுள்ளது. ஸ்பெயின் நாட்டின் மொத்த மக்கள் தொகை




5 கோடியாகும். இவர்களின் எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டனர் என்ற தகவல் வெளியாகவில்லை.

போர்த்துக்கலில் சுமார் 1.06 கோடி மக்கள் வசித்து வருகிறார்கள். இங்கேயும் பயங்கர மின்தடை ஏற்பட்டது. தலைவர்கள், வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகள் பாதிக்கப்பட்டன.

மின்சாரம் வழங்கும் தொலைதொடர்பில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக மின்சார தடை ஏற்பட்டதாக போர்த்துக்கல் தெரிவித்துள்ளது.

போர்த்துக்கலில் நீதிமன்ற பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஏ.ரி.எம் மற்றும் மின்னணு கட்டணம் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

காஷ்மீர்

## 48 சுற்றுலா தலங்களுக்கு பூட்டு

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப்பிறகு, பாதுகாப்புப் படையினர் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதால், ஜம்மு காஷ்மீரில் உள்ள 87 சுற்றுலாத்தலங்களில் 48 தலங்கள் பாதுகாப்பு காரணமாக மூடப்பட்டுள்ளன.

ஜம்மு காஷ்மீரில் மீண்டும் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற உளவுத்துறை தகவலை அடுத்தே, இந்த சுற்றுலாத்தலங்கள் மூடப்பட்டுள்ளன.



இந்தியா

## “தீவிரவாதத்தின் புதுமுக திருமணம்”

தீவிரவாதத்தின் புதுமுகமாக திருமணம் இருக்கிறது என்று, பாஜக எம்.பி. நிஷிகாந்த் துபே விமர்சனம் செய்துள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் வலைதளப் பக்கத்தில் நிஷிகாந்த் கூறுகையில், “திருமணத்தின் மூலம் மட்டும் 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட பாகிஸ்தான் பெண்கள் இந்தியாவுக்குள் வந்துள்ளனர். அவர்களுக்கு இன்னும் இந்திய குடியுரிமை வழங்கப்படவில்லை.

“ இதுபோல் திருமணம் மூலம் இந்தியாவுக்குள் வரும் பாகிஸ்தான் பெண்களின் எண்ணிக்கை அதிகரிப்பது, தீவிரவாதத்தின் புதுமுகமாக தெரிகிறது. இதை எதிர்த்து நாம் எப்படி போராடப் போகிறோம். இந்த விஷயம் மிகவும் கவலை அளிக்கிறது” என்று விமர்சித்துள்ளார்.

## இருபதுக்கு-20 போட்டிகளில் சதமடித்த இளையவராக சூரியவன்ஷி

இருபதுக்கு-20 போட்டிகளில் சதமடித்த இளையவராக தனது பெயரை இந்தியன் பிறீமியர் லீக்கின் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் வைபவ் சூரியவன்ஷி பதிந்து கொண்டார்.

குஜராத் டைட்டான்ஸுக்கு எதிராக திங்கட்கிழமை (28) நடைபெற்ற போட்டியில் 35 போட்டிகளில் சதத்தைப் பூர்த்தி செய்த 14 வயதான சூரியவன்ஷி, 2013ஆம் ஆண்டு மும்பைக்கெதிராக இந்தியாவின் மகாராஷ்ராவின் விஜய் ஸோல் 18 வயதில் சதம் பெற்ற இள வயதில் சதம் பெற்ற சாதனையை முறியடித்தார்.

ஜெய்ப்பூரில் நடைபெற்ற குறித்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட குஜராத், அணித்தலைவர் ஷுப்மன் கில்லின் 84 (50), ஜொஸ் பட்லரின் ஆட்டமிழக்காத 50 (26), சாய் சுதர்ஷனின் 39 (30) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில், மகேஷ் தீக்‌ஷன 4-0-35-2, சந்தீப் ஷர்மா 4-0-33-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 210 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான், சூரியவன்ஷியின் 101 (38), யஷஸ்வி ஜைஸ்வாலின் ஆட்டமிழக்காத 70 (40), அணித்தலைவர் ரியான் பராக்கின் ஆட்டமிழக்காத 32 (15) ஓட்டங்களோடு 15.5 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில், வெற்றியிலக்கையடைந்திருந்தது.




## 94 போட்டிகளை கொண்டதாக மாறும் ஐ.பி.எல்?

இந்தியன் பிறீமியர் லீக்கானது (ஐ.பி.எல்) 2028ஆம் ஆண்டு 94 போட்டிகளைக் கொண்டதாக மாறுவதற்கு எதிர்பார்ப்பதாக அதன் தலைவர் அருண் சிங் டுமால் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் 10 அணிகளும் தமது மைதானத்திலும், எதிரணியிலும் விளையாடும்.

கடந்த 2022ஆம் ஆண்டு லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸும், குஜராத் டைட்டான்ஸும் இணைத்துக் கொள்ளப்பட்ட பின்னர் ஐ.பி.எல்லானது 74 போட்டிகளாக மாற்றமடைந்திருந்தது.




## பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் 227 ஓட்டங்களுடன் சுருண்ட சிம்பாப்வே

பங்களாதேஷுக்கெதிரான இரண்டாவது டெஸ்டின் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 227 ஓட்டங்களையே சிம்பாப்வே பெற்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில் முதலாவது போட்டியில் சிம்பாப்வே வென்ற நிலையில், சட்டோகிராமில் திங்கட்கிழமை (28) ஆரம்பித்த இப்போட்டியில் தஜியுல் இஸ்லாம் (6), நயீம் ஹஸன், தன்ஸிம் ஹஸன் சகிப்பிடமே சிம்பாப்வே சுருண்டது. துடுப்பாட்டத்தில் ஷோன் வில்லியம்ஸ் 67, நிக் வெல்ஷ் 54 ஓட்டங்களைப் பெற்றனர்.



## அம்பாறை பிரதேச செயலகங்களுக்கிடையிலான கடற்கரை கரப்பந்தாட்டம்: சம்பியனானது காரைதீவு பிரதேச செயலகம்

வி.ரி.சகாதேவராஜா

தேசிய விளையாட்டு விழாவின் அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான கடற்கரை கரப்பந்தாட்டத் தொடரில் காரைதீவு பிரதேச செயலக சம்பியனானது.

கல்முனை கடற்கரையில் ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெற்ற 13 பிரதேச செயலகங்கள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் மகா ஓயா பிரதேச செயலகத்தை வென்றே காரைதீவு வரலாற்றில் முதல் முறையாக மாவட்ட மட்ட கடற்கரை கரப்பந்தாட்டத்தில் காரைதீவு பிரதேச செயலக அணியாக களமிறங்கிய



காரைதீவு விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

காரைதீவு கழக உறுப்பினர்களான வரனுஜன் மற்றும் சதுசன் ஆகியோர் இவ் வரலாற்றுச் சாதனையை படைத்துள்ளனர்.

அடுத்து இவர்கள் மாகாண மட்டப் போட்டியில் கலந்து கொள்வார்கள்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 30, ஏப்ரல் 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.